# தனிப்பாடல்கள் – காளமேகப்புலவர் பாடல்

# தரம் 10

தொகுப்பு – திருமதி ப.சிந்தனைச்செல்வி
கே.தெஹி.பம்பேகம த.ம.வி
தெஹியோவிட்ட கல்வி வலயம்

**காளமேகம்** 15 ஆம் நுற்றாண்டில் வாழ்ந்த ஒரு தமிழ்ப் புலவர் ஆவார். வைணவ சமயத்தில் பிறந்த இவர், திருவானைக்கா கோவிலைச் சேர்ந்த மோகனாங்கி என்பவளிடம் ஆசை கொண்டார். இதனால் தனது சமயத்தை விட்டு மோகனாங்கி சார்ந்திருந்த சைவ சமயத்துக்கு மாறினார். இவர் சைவப் பாடல்கள் பாடுவதில் வல்லவர் என்று கூறப்படுகின்றது. ஆனாலும் இவர் பல சிறந்த நயம் மிகுந்த பாடல்களையும் பாடியுள்ளார். இவர் பாடிய சிலேடைப் பாடல்களும், நகைச் சுவைப் பாடல்களும் பல உள்ளன. சமயம் சார்ந்த நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். இவர் ஒரு ஆசு கவி ஆவார்.



காளமேகப்புலவர்

கழியும் பிழைபொருட் டள்ளிநன்னூலாங் கடலினுண்டு
வழியும் பொதிகை வரையினிற் கால்கொண்டு வண்கவிதை
மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கிமின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே

**பொருள்** - கழிக்கத்தக்க பிழைகளையெல்லாம் விலக்கி, கடல் போன்ற நல்ல நூல்களை அறிவுக்கு உணவாக உண்டு, பொதிகை மலையிலே தவழ்கின்ற தென்றலைத் துணைகொண்டு, வனப்பு மிக்க கவிதைகளைப் பாடுகின்ற புலவர்களுடைய மனமாகிய வானத்திலே ஏறிக்கொண்டு இடிபோல இடித்து, மின்னலைப்போல் மின்னி, மழையொத்து கவிமழையைப் பொழியவே இந்தக் காளமேகம் புறப்பட்டு விட்டது தெரிந்துகொள்.